ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2095/19 - 2018 නොවැම්බර් මස 01 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.11.01
*2095/19 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்டவாறான, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதிசேர் வரிச் சட்டம்***

2அ ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளை

2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் 2அ ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம், இதனகத்துக்குப் பின்னர் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அட்டவணையின் I மற்றும் II ஆம் நிரல்களில் இ. மு. கு. தலைப்பு மற்றும் விபரம் என்பனவற்றில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு பொருளினதும் இறக்குமதி அல்லது விற்பனை மீது அதே அட்டவணையின் III ஆம் நிரலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விகிதத்தின் பிரகாரம் பெறுமதிசேர் வரி அறவிடப்படுதல் வேண்டுமென இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர்.

நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு,
கொழும்பு 01,
2018, நவெம்பர் 01.

1A-PG 4303 — 557 (2018/11)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

| இ. மு. த. இல. I | விபரம் II | பெ. சே. வரி விகிதம் III |
|---|---|---|
| 4407 | தட்டையாததாக்கப்பட்ட, மினுக்கப்பட்ட அல்லது விரல் மூட்டப்பட்டு இணைக்கப்பட்ட அல்லது இவை செய்யப்படாத 6 மில்லி மீற்றருக்கு மேற்பட்ட தடிப்புடைய நீளப்பாட்டில் அரியப்பட்ட அல்லது பிளக்கப்பட்ட துண்டு போடப்பட்ட மரம் | 5% |
| 4408 | தாள்களை மறைப்பதற்கான (லேமினேற் செய்யப்பட்ட மெல்லிய பலகையானவைகள் உள்ளடங்கலாக) ஒட்டுப் பலகை அல்லது அவை போன்ற லேமினேற் செய்யப்பட்ட பலகை மற்றும் 6 மில்லி மீற்றருக்கு மேற்படாத தடிப்புடைய நீளப்பாட்டிற்கு அரியப்பட்ட துண்டு போடப்பட்ட அல்லது உரிக்கப்பட்ட, மட்டமாக்கப்பட்ட அல்லது மினுக்கப்பட்ட அல்லது மரத்துண்டுகள் அல்லது மூட்டப்பட்ட இணைப்புக்கள் அல்லது இம்மூன்றும் செய்யப்படாத மென்மர('வெனீர்') தாள்களும் ஒட்டுப்பலகைக்கான தாள்களும் (மூடப்பட்ட அல்லது மூடப்படாத) | 5% |

*11-773*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.